DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
24 JAN 2018
CHENNAI-600 015

ADRD (PRI)

115

சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நிலமாற்றம் – மதுரை மாவட்டம் – திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் – மேலக்கோட்டை ஊராட்சி மேலக்கோட்டை கிராமத்திலுள்ள தரிசு நிலம் ச.எண்.114/5Bல் 45 சென்ட்நிலத்தினை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு நிரந்தர கட்டடம் கட்ட நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.4)துறை

அரசாணை(நிலை)எண்.14 நாள் 19.01.2018

படிக்கப்பட்டவை:

1 மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க.எண்.39/2015/அ2, நாள் 28.09.2015
2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.69636/2015/ஊராட்சி 3–3, நாள் 19.08.2017.

-----

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் செயல்பட்டுவரும் தீயணைப்பு நிலையம் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும் போதிய இட வசதி இல்லாததாலும் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கோட்டை ஊராட்சி, மேலக்கோட்டை கிராம சர்வே எண்.114/5B–ல் உள்ள 45 சென்ட் பரப்பு நிலத்தை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்திட நிபந்தனைகளுக்குட்பட்டு திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் (தீர்மானம் எண்.99, நாள் 31.05.2017) இயற்றப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார் எனவும், மேற்படி இடத்தில் தற்போது கட்டடங்கள் ஏதும் இல்லை எனவும், நிலமாற்றம் கோரும் இடம் ஒன்றிய பயன்பாட்டிற்கு தற்போது தேவை இல்லை எனவும், மேற்படி இடத்திற்கான கிரையத் தொகையினை செலுத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அரசின் சேவை துறை என்பதால் பொதுநலன் கருதி நிலத்தின் மதிப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து, இலவசமாக அத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள சர்வே எண்.114/5B மொத்த விஸ்தீரணம் 26.50 ஏர்ஸ் (அ) 64.455 சென்ட்–ல் 45 சென்ட் நிலத்தை மட்டும், அவசியம் மற்றும் அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு ஒதுக்கீடு செய்யுமாறும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிதியிலிருந்து தமிழ்நாடு காவல் வீட்டுவசதி கழகத்தினரால் திருமங்கலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய கட்டடம் கட்டப்பட உள்ளதாகவும், இக்கட்டடம் அரசின் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய பணிகளுக்காக மட்டும் பயன்படுத்தப்பட உள்ளது எனவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அரசின் சேவை துறை என்பதால் நிலக்கிரைய மதிப்பு தொகை செலுத்துவதில் இருந்து விலக்களித்து இலவசமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம்

மேலக்கோட்டை ஊராட்சி, மேலக்கோட்டை கிராம சர்வே எண்.114/5B–ல் 45 செண்ட் பரப்பு நிலத்தை நிலமாற்றம் செய்ய உரிய ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. 1994–ம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 242(2) (xix)–ஐ அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட அரசாணையின்படி ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சொத்துக்களை உரிமை மாற்றம் செய்திட அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரசு ஆணை (நிலை) எண்.209, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 17.08.2000–ல் பத்தி 5–ல் ரூ.50,000/– மதிப்பிற்குட்பட்ட கிராம ஊராட்சி நிலங்களை ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவரே மாற்றம் செய்யலாம் என்றும் ரூ.50,000/–க்கு அதிகமான மதிப்புடைய நிலங்களை மாற்றம் செய்ய அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்கள் கொண்டடைவு செய்தல், மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் விதி 5ன்படி ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு நிலக்கிரைய மதிப்பு தொகை செலுத்துவதில் இருந்து விலக்களித்து இலவசமாக மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மேலக்கோட்டை ஊராட்சி மேலக்கோட்டை கிராமத்தில் உள்ள தரிசு நிலத்தில் சர்வே எண்.114/5B–ல் உள்ள 45 செண்ட் பரப்பு நிலத்தின் சொத்துரிமையை தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களை கொண்டடைவு செய்தல், மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் இதர விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுத்து நில உரிமை மாற்றம் செய்ய திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்.
ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மதுரை.மாவட்டம்
மாநில கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை மாவட்டம்

<u>நகல்</u>
உள் துறை, சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்க அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்,

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. Rajamani
பிரிவு அலுவலர்
மை